**முதன்மை சார்பு மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

**S.C. No.106/2015**

இன்று ( 15/10/2019 ) 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் (1)ன் படி **திரு.எஸ். முத்துகுமாரவேல், B.Com.,B.L.,** முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி PW 9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **விஜயகுமார்** | சாதி | |
| த/பெ | மாரியப்பன் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம் | | வயது | |

**முதல் விசாரணை**

நான் விழுப்புரம் மருதூரில் வசித்து வருகிறேன். தற்போது பெங்களூரில் டைல்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கையெழுத்தை நான் எங்கே வைத்து போட்டேன் என்றால் (ஒப்புதல் வாக்குமூலம் காட்டப்பட்டது) போலிசார் மாரியம்மன் கோயில் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தபோது போலிசார் வெள்ளை தாளில் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அதசாஆ-6.

**சாட்சி பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பு வழக்கறிஞரால் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

24/11/2008ந் தேதி காலை 06.00 மணிக்கு விழுப்புரம் வி.மருதூரை சேர்ந்த திருவள்ளுவர் நகரை சேர்ந்த வரதராஜன் மகன் செல்வம் என்பவரும் நானும் மாரியம்மன் கோயில் அருகே நின்று கொண்டிருந்தபோது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தின் ஆய்வாளரிடம் என் முன்பு ஜெயப்பிரகாஸ் நாராயணன் என்பவர் அன்றைய தினம் 06.00 மணிக்கு கொடுத்த வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றாலும் போலிசார் அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள் என்றாலும் நான் பொய்யாக எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

x

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் இடப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை
உதவி அமர்வு நீதிபதி, விழுப்புரம்